**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2019 ஆம் ஆண்டிற்கான கொழும்பு மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2128 - 2019 ජුනි මස 14 වැනි සිකුරාදා - 2019.06.14

*2128 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1118 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1132 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) சம்பளச் சபைகள் (திருத்தம்) சட்டமூலம், 2019, யூன் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்) சட்டமூலம், 2019, யூன் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2019, யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1117 - B81532 - 5,403 (2019/ 05)

# பதவிகள் - வெற்றிடம்

## பலப்பிட்டிய பிரதேச சபை

### தென் மாகாண அரசாங்க சேவை வெற்றிடங்கள்

01. தென் மாகாண அரசாங்க சேவையில் பலப்பிட்டிய பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள காவற்காரர், நூலக உதவியாளர் சுகாதார சிற்றூழியர் பதவிக்காக கீழ்க் குறிப்பிட்டுள்ள தகைமையுடைய தென் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடமுள்ள ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சேவை வகை மற்றும் வகுப்பு | சம்பள அளவுத்திட்டம் | குறைந்த பட்ச கல்வித்தகைமை |
|---|---|---|---|---|---|
| (1) | காவற்காரர் | 02 | ஆரம்ப மட்டம் தேர்ச்சி அற்ற III | பொ. நி.சு. 03/2016 இற்கமைய PL1-2016 ரூபா 24,250– 10X250 – 10X270 – 10X300 – 12X330 – ரூபா 36,410 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும் |
| (2) | நூலக உதவியாளர் | 01 | ஆரம்ப மட்டம் தேர்ச்சி அற்ற III | பொ. நி.சு. 03/2016 இற்கமைய PL1-2016 ரூபா 24,250– 10X250 – 10X270 – 10X300 – 12X330 – ரூபா 36,410 | க. பொ. த. (சா.த.)பரீட்சையில் இரண்டு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும் |
| (3) | சுகாதார சிற்றூழியர் | 01 | ஆரம்ப மட்டம் தேர்ச்சி அற்ற III | பொ. நி.சு. 03/2016 இற்கமைய PL1-2016 ரூபா 24,250– 10X250 – 10X270 – 10X300 – 12X330 – ரூபா 36,410 | குறைந்தபட்சம் 8 ஆம் தர /9ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல். |

02. **வயதெல்லை :**

(i) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) தற்போது அரசாங்க சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஆகக் கூடிய வயது எல்லை தேவைப்படமாட்டாது. (இவ்வாறான விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.)

03. **பொதுத் தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் பரம்பரை மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அண்மித்த 03 வருடகாலம் தென் மாகாண சபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருக்க வேண்டும். பலப்பிட்டிய பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(iii) சிறந்த ஒழுக்கமுடையவராகவும் ஆரோக்கியமான உடல் நலத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iv) குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

(v) குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.

(vi) விண்ணப்பதாரிகள் குறித்த பதவிகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதியன்று பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

*04.* **ஆட்சேர்ப்பு தொடர்பான பொதுத் தகைமைகள் :**

(i) விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது ஆட்சேர்ப்பு பிற்போடல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது அறிவித்தலை இரத்துச்செய்தல் அல்லது திருத்தம் மேற்கொள்ளல் போன்ற எல்லா அதிகாரங்களும் பலப்பிட்டிய பிரதேச சபைத் தலைவருக்கு உரியது.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் மூன்று மாதத்திற்குள் வைத்திய பரிசோதனைக்கு தோற்ற வேண்டும் என்பதுடன் அப்பரிசோதனையில் உடல் மற்றும் உள நிலைமை சீரற்றதாகக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

*05.* **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய சம்பளத்திற்கு உட்பட்டதாகும். உமக்கு உரித்தான ஓய்வூதியச் சம்பளத் திட்டம் தொடர்பாக அரசினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்பட வேண்டும். விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுவோர் 03 வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(iii) இவ்வாட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும் அரசாங்க திணைக்கள கட்டளைகளுக்கும் தென் மாகாண சபை, தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பலப்பிட்டிய பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய ஒழுகுவதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

*06.* **ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**

விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு விதிகளின் 01ஆம் இணைப்பின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள முறையில் பெற்றுக்கொண்ட அதிகூடிய புள்ளிகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

| | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான நிலை | அதிகூடிய புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்காக குறைந்த புள்ளி மட்டம் |
|---|---|---|---|
| 01 | கல்வித் தகைமை | 30 | 50% |
| 02 | ஏனைய தகைமைகள் (அட்டவணை 02 உடன் தொடர்புடையது) | 10 | |
| 03 | அனுபவம் (அட்டவணை 02 உடன் தொடர்புடையது) | 10 | |
| 04 | வதிவிடம் பிரதேச சபை எல்லைக்குள் (ஒவ்வொரு வருடங்களுக்கும் 5 புள்ளிகள் வீதம்) | 45 | |
| 05 | நேர்முகப்பரீட்சையில் காட்டிய தேர்ச்சி | 05 | |
| | மொத்தம் | 100 | |

**குறிப்பு :**

1. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது அடிப்படைத் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

2. அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகளில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் தேர்ச்சி அடிப்படையில் மற்றும் வெற்றிடமாகவுள்ள தொகைக்கு ஏற்ப ஆட்சேர்ப் பு நடைபெறும்.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

விண்ணப்பதாரிகள் கீழே வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க 12"x8"(A4) அளவுடைய தாளில் தாங்கள் விண்ணப்பங்களை தயாரித்து 2019.06.20 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் ''தலைவர், பலப்பிட்டிய பிரதேச சபை, பலப்பிட்டிய'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உரிய பதவியினைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்குப் புறம்பான, பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

08. விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

i. பிறப்புச் சான்றிதழ் ;

ii. தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி ஒன்று ;

iii. கல்விச் சான்றிதழ்/மாணவர் செயற்பாட்டு அறிக்கை ;

iv. வதிவிடத்தை உறுதிப்படுத்தல். (வதிவிடம் தொடர்பாக கிராம அலுவலரால் வழங்கப்படும் சான்றிதழை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரினால் சுருக்கெழுத்து கையொப்பமிடப்பட்ட 6 மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ்).

v. அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் 02 ;

vi. தொழில் அனுபவ சான்றிதழ் (இருப்பின்) ;

vii. சேவை அனுபவ சான்றிதழ் ;

viii. ஏதாவது குற்றம் தொடர்பாக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக கருதப்படாதவராக மற்றும் அவ்வாறான குற்றங்கள் தொடர்பாக தற்பொழுது பரிசீலணைக்கு உட்படாதவரென உறுதிப்படுத்தும் பொலிஸ் சான்றிதழ்.

09. இவ்வறிவித்தலின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்பில் ஏதாவது தெளிவின்மை ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலை நாடவும்.

எஸ். சமன் த சில்வா,
தலைவர்,
பலப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை,
பலப்பிட்டிய.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தென்மாகாண அரசாங்க சேவையில் பலப்பிட்டிய பிரதேச சபையில் ......................................................பதவி**

01. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ...........................................................................................

(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ..............................................................................

02. நிரந்தர வதிவிட மாவட்டம் : ...................................................................................................

03. பிரதேச செயலாளர் பிரிவு : ................................................................................................

04. நிரந்தர முகவரி : ................................................................................................

05. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ..............................................................

06. பால் : ஆண்/பெண் : ................................................................................................

07. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | நாள் : | | |

08. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : | | | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

09. நீர் இலங்கைப் பிரசையாயின், வம்சாவழி மூலமா? அல்லது பதிவின் மூலமா? : ............................................

10. கல்வித் தகைமைகள் : (சித்தியெய்திய பரீட்சைகள் விபரம்) (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கவும்)

11. தொழில் மற்றும் வேறு தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கவும்)

12. விண்ணப்பதாரி தற்போது சேவையில் உள்ளவராயின் :

(i) பதவி : ................................................................................................
(ii) சேவை செய்யும் அலுவலகம் : ................................................................................
(iii) அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி : ................................................................................

13. நீர் ஏதாவது நீதிமன்றத் தண்டனைக்கு ஆளாகியுள்ளீரா ? : ..............................................................

14. **விண்ணப்பதாரியின் சான்றுரை :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மை என்றும் சரியானது என்றும், இத்தால் உறுதி மொழிகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மைக்குப் புறம்பானது என்று நான் அந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரிய வரும் இடத்து நான் தகுதியற்றவன் என்று கருதப்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரிய வரும் இடத்து எந்த விதமான நட்டஈடும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உடன்படுகின்றேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி ................................

15. அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் :

இவ்விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ................................................................ என்பவர் தற்பொழுது இந்நிறுவனத்தில் ...................................... ஆக கடமையாற்றுகிறார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்தவிதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்காகவும் தண்டனை பெறவில்லை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்தவில்லை.

................................,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திகதி ................................

06 – 366

**வெலிகம நகர சபை**

வெலிகம நகர சபையில் வெற்றிடமாகியுள்ள கீழே காட்டப்பட்டுள்ள பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்பதற்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

| பதவிப் பெயர் | வெற்றிடம் | மாதாந்த சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும் |
|---|---|---|---|
| 1. சாரதிகள் III ஆம் தரம் | 01 | அ. சு. அ. இல. 03/2016 இன்படி PL-3-2016 சம்பளத் தொகுதியின் ஆரம்பக் கட்டம் ரூபா 25,790-10x270 - 10x300-10x330-12x350- ரூபா 38,990 | க. பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஏதாவது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கலை தேர்ச்சித் திறன் வெற்றிடமாகியுள்ள மோட்டார் வாகன வகை யுடைய சாரதி பதவிகளின் தன்மைக்கு ஏற்ப வாகனம் ஓட்டல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் ஓட்டும் உத்தரவுப் பத்திரம் மற்றும் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். மோட்டார் வாகன சாரதி உத்தரவுப் பத்திரம் பெற்றதன் பின்னர் குறைந்தளவில் 03 வருட கால தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும். |
| 2. நிறை வாகன இயந்திர இயக்குநர் | 01 | கொந்திராத் முறையில் | |

**வயது** :- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாததுமாக இருத்தல் வேண்டும். (நிரந்தர பதவியில் இருக்கும் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டது.)

**பொதுத் தகைமைகள் :-**

I. இவ்விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டியதோடு, விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு தென் மாகாண சபையின் வலுப் பிரதேசத்தில் குறைந்தளவில் 05 வருடவதிவினையும் மற்றும் 03 வருட கால நிரந்தர வதிவாளராகவும் இருத்தல் வேண்டும்.

II. வதிவுப் பிரிவின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ் உட்பட பிரதேச செயலாளரின் மேல் ஒப்பமும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

III. அனைத்து விண்ணப்பதாரிகள் தென் மாகாணத்தின் எந்தப் பகுதியிலும் சேவை புரியக் கூடியதாகவும் பதவியை மேற்கொள்ள போதுமான உடல் மற்றும் மன நிலையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

IV. விண்ணப்பதாரிகள் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதி மன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து தரம் குறைக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

**சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :-**

I. சாரதி III ஆம் தர பதவி நிரந்தர மற்றும் ஓய்வூதியம் உடையதாகும். உங்களுக்கான ஓய்வூதியச் சம்பளத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசினால் மேற்கொள்ளும் கொள்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் நீர் அடி பணிதல் வேண்டும்.

II. நிறை வாகன இயந்திர இயக்குநர் பதவி கொந்திராத் முறையில் ஆகுவதோடு ஊழியர் சேமலாப நிதி மற்றும் சேவை ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்துவத்திற்கு உட்படுத்தப்படும்.

III. இப் பதவி 03 வருட பயிற்சி காலத்திற்கு உட்பட்டதோடு 03 வருடத்தின் பின் வேலை, வருகை, நடத்தை, என்பன சிறந்த நிலையில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனக் கடிதம் வழங்கப்படும். III ஆம் தர சேவைக்கு உட்பட்டு 04 காவது சம்பள தரத்திற்கு உட்பட முன்னர் செயற் திறன் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

IV. இந்த ஆட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிருவாகக் கோவையின் கட்டளைகளுக்கும் நிதிக் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் மற்றும் தென் மாகாண சபையினால் அடிக்கடி விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் சுற்றறிக்கைகளுக்கும் கொள்கைகளுக்கும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கட்டளைகளுக்கும் அனுசரித்து செயற்பட அனைத்து ஊழியர்களும் இணைந்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கப்பட வேண்டிய முறை :**

இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க A4 அளவிலான தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2019.07.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக "செயலாளர், வெலிகாம நகர சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைகக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் போடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்பட வேண்டும். உரிய முறையில் நிரப்பப்படாத உரிய திகதிக்குப் பின் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப்பத்திரங்கள் இரத்துச்செய்யப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் தாமதப்படுத்தல், வித்தியாசமாக்குதல் கட்டளையை இரத்துச் செய்தல் மற்றும் திருத்துதல் போன்ற அனைத்து செயற்பாடுகளும் வெலிகம நகர சபையின் தவிசாளரைச் சாரும்.

விண்ணப்பங்கள் முன்னவக்கப்பட்ட மற்றும் ஆட்சேரப்புக்கு தேவையான தகுதிகளை உடைய விண்ணப்பதாரிகள் சட்டபூர்வமான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும். நேர்முகப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

விண்ணப்பப்பத்திரங்களுடன் கீழே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் சான்றுபடுத்தப்பட்டு இணைக்கப்படல் வேண்டும். மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைத்தல் வேண்டும்.

01. பிறப்புச் சான்றிதழ் ;
02. கல்விச் சான்றிதழ் ;
03. மோட்டார் வாகன போக்குவரத்துச் சபையினால் வழங்கப்பட்ட சாரதிகள் உத்தரவுப் பத்திரம் ;
04. வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்) ;
05. சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;
06. தேர்ச்சி தொடர்பான சான்றிதழ்.

றெஹான் டி. டபிள்யூ. ஜயவிக்ரம,
தவிசாளர்,
வெலிகம நகர சபை.

வெலிகம நகர சபை அலுவலகம்,
2019, மே 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெலிகம நகர சபை**

........................................................ **பதவி**

01. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :
..........................................................................................................................................

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ..............................................................................

03. நிரந்தர முகவரி : ..........................................................................................................................

04. தொலைபேசி இலக்கம் : ..........................................................................................................

05. பிறந்த திகதி : ஆண்டு .................. மாதம் .................. திகதி ..................

06. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ...........................................................................

07. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் .................. மாதங்கள் .................. நாட்கள் ..................

08. பால் : ஆண்/பெண் : .....................................................................................................................

09. திருமணமானவரா?/திருமணமாகாதவரா? : ..................................................................................

10. இனம் : .........................................................................................................................

11. நீர் இலங்கைப் பிரசையாயின், வம்சாவழி மூலமா? அல்லது பதிவின் மூலமா? : .............................................

12. கல்வித் தகைமைகள் :

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

13. **அனுபவம் மற்றும் தொழில் தகுதிகள் :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் உண்மையானதும் அதில் எதுவும் பிழை இல்லை எனவும் உறுதி மொழிகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக என்னால் தரப்பட்ட தகவல்கள் பிழையானது எனத் தெரியவந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எனது நியமனம் எந்தவித தண்டப்பணமுமின்றி இரத்துச் செய்யப்பட வேலையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் என நான் அறிந்து கையொப்பமிடுகின்றேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி ................................

**தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பாக நிருவனத் தலைவரின் உறுதி**

விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி ............................................................ என்பவர் தற்பொழுது இந்நிறுவனத்தில் ..................................... ஆக கடமையாற்றுகிறார். விண்ணப்பப்படிவத்தினை உறுதிசெய்து/உறுதி செய்யாது முன்வைக்கின்றேன்.

................................,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திகதி ................................

06 – 368

---

**மத்திய மாகாண அரசாங்க சேவையின் கங்க இஹல கோறளே பிரதேச சபையின்**
**பதவி வெற்றிடங்களை நிரப்புதல்**

கங்க இஹல கோறளே பிரதேச சபையில் தற்போது நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கெனப் பின்வரும் ஆட்சேர்ப்புக்கான தகைமைகளைக் கொண்டுள்ள கங்க இஹல கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பதவியின் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | ஆட்சேர்ப்பு முறை |
|---|---|---|---|---|---|
| 04 | வாகன ஓட்டுநர்<br><br>(ஒப்பந்த அடிப்படை ஆட்சேர்ப்புக் கானது) | 01 | அடிப்படைக் கொடுப்பனவு ரூபா 23,126.00<br><br>இணக்கக் கொடுப்பனவு ரூபா 1965.00<br><br>வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7800.00 | 01. இரு அமர்வுகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் 02 திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>02. தனியார்/வாடகை வாகனங்கள் மற்றும் 24 அந்தர் நியம நிறையை விடக் குறைந்த ஸ்டேஷன் வெகன் வண்டியை ஓட்டும் சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>(ஆட்சேர்ப்புத் தினத்துக்குக் குறைந்தது 03 வருடங்களுக்கு முன்னர் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட சீ மற்றும் சீ1 வகுப்பு வாகன வகுப்பு அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப் பத்திரத்துக்கமைய பி வகுப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். | எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின்படி அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிடமிருந்து தொழிற் சோதனையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேவையான அனைத்துத் தகைமைகளையும் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடையே அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரது தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.<br><br>எழுத்துப் பரீட்சை வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறியியல் பற்றிய அடிப்படை அறிவு என்ற இரண்டு வினாப்பத்திரங்கள் கொண்டது.<br><br>கட்டமைப்பான பரீட்சையின் புள்ளி வழங்கும் திட்டம் வருமாறு : |

| தொ. இல. | பதவியின் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | ஆட்சேர்ப்பு முறை |
|---|---|---|---|---|---|
| | | | | 03. வாகன ஓட்டுநராக அனுமதிப் பத்திரம் பெற்று ஆகக் குறைந்தது 03 வருட கால சேவை அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப் படுத்துதல் வேண்டும்.)<br><br>04. பகல் மற்றும் இராக் காலங்களில் சேவையாற்றக் கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>05. குறைந்தது 05 அடி 2 1/2 அங்குல உயரம் கொண்டிருத்தல் வேண்டும். | 1. வாகனம் ஓட்டும் தேர்ச்சி - 40 புள்ளிகள்<br><br>2. வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய செயன்முறை அறிவு - 40 புள்ளிகள்<br><br>3. மோட்டார் பொறிமுறை பற்றிய அடிப்படை அறிவு - 20 புள்ளிகள்<br><br>கங்க இஹல கோறளே பிரதேச சபையில் தற்போது சமயோசித, பதிலீட்டு அல்லது ஒப்பந்த, அடிப்படையில் பணியாற்றுவோர் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும். |

02. **ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள்** :

(i) விண்ணப்பதாரிகள் பரம்பரை மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 03 வருட காலத்துக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். (வதிவிடச் சான்றிதழை முன்வைத்தல் வேண்டும்.)

(iii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) மேற்குறித்த பதவிக்குரிய தேவையான ஆகக் குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(v) ஆட்சேர்ப்பு தொடர்பான முறையான நேர்முகத் தேர்வை எதிர்கொண்டு பெறுபேறுகளின்படி அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரது தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

(vi) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

03. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) உரியவாறு அரசாங்க சேவையின் சேமலாப நிதியத்துக்கு மற்றும் அரசாங்க சேவைகள் நம்பிக்கை நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைத் தாபனக் கோவையின் ஏற்பாடுகள், மத்திய மாகாண சபை நிதிப் பிரமாணங்கள், திணைக்களங்களது கட்டளைகள், மத்திய மாகாண சபை அல்லது மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் கங்க இஹல கோறளே பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டளைகளுக்கும், நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்குப் பணியாளர்கள் உட்படுதல் வேண்டும்.

(iii) சிறந்த நன்னடத்தை உடையவராகவும் நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

(v) அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ அல்லது பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தல் கூடாது.

*04.* **விண்ணப்பிக்க வேண்டிய முறை**

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக 8.27" x 11.69" (A4) அளவான தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2019.06.28 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், கங்க இஹல கோறளே பிரதேச சபை, குருந்துவத்த பஸார்" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலில் காணாமற்போன அல்லது பிழையாக முகவரியிடப்பட்டுத் திருப்பி அனுப்பிய விண்ணப்பங்கள் தொடர்பில் வகை கூறப்பட மாட்டாது. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் பூரணமற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணபப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்திய பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) தேசிய ஆளடையாள அட்டை ;
(3) கல்விச் சான்றிதழ்கள் ;
(4) பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய தமது நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரது சான்றிதழ் ;
(5) தொழிற் தகைமைகளது சான்றிதழ்கள் ;
(6) சேவைச் சான்றிதழ்கள் ;
(7) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்.

யூ. ஜீ. ஜயரத்ன,
செயலாளர்,
கங்க இஹல கோறளே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கங்க இஹல கோறளே,
2019, மே 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரசாங்க சேவையின் வெற்றிடங்களை நிரப்புதல்**

**கங்க இஹல கோறளே பிரதேச சபை**

........................................................ பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் - முதலெழுத்துக்களுடன் : ........................................................................

2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : ........................................................................

3. நிரந்தர முகவரி : ........................................................................

4. பிறந்த திகதி : ஆண்டு ............... மாதம் ............... திகதி ...............

5. விவாக நிலை : விவாகமானவர்/தனித்தவர் : ..........................................................................................

6. இனம் : ..........................................................................................................................

7. இலங்கைப் பிரசையாவது பிறப்பிலா /பதிவு மூலமாகவா என்பது பற்றி : ......................................................

8. கல்வித் தகைமைகள் :
க.பொ.த. (சா.த.) பரீட்சை ........................ சுட்டெண் ............................. வருடம் .....................

| | பாடம் | சித்தி | | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

09. 1. ஏனைய தகைமைகள்
2. தொழிற் தகைமைகள்
3. சேவை அனுபவம்
4. அனைத்துக் கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

10. ஏதேனும் குற்றம் ஒன்றுக்கு நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ...............................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................. ......................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**திணைக்களத் தலைவரின் சிபாரிசு**

(தற்போது அரசாங்க சேவையிலுள்ளோருக்கு மாத்திரம்)

திரு./ திருமதி/ செல்வி. ......................................................என்ற விண்ணப்பதாரி இந்த நிறுவனத்தில்/ திணைக்களத்தில் நிரந்தர/சமயோசித/பதிலீட்டு/ஒப்பந்த அடிப்படையில் ..........................ஆகப் பணியாற்றுகின்றார். இந்தப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

......................................................
திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : ......................................................
பதவி : ......................................................
பதவி முத்திரை : ......................................................
திகதி : ......................................................

06 - 437

**உடுபத்தாவ பிரதேச சபை**

**வடமேல் மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடத்திற்காக சேர்த்துக்கொள்ளல்**

உடுபத்தாவ பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப தேர்ச்சியற்ற தரத்திற்குரிய பதவிக்காக அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தரமாக குடியிருப்பாளர்களிடத்தில் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| பதவியின் பெயர் | பதவி நிலை | தரம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத் திட்டம் | கல்வி மற்றும் தொழில் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| தொழில்/கள தொழிலாளர் (பாதை) | ஆரம்ப தேர்ச்சி யற்ற | III | 06 | அ.நி.சு. 03/2016 - PL1-2016 ரூபா 24,250-10x250 - 10x270 - 10x300- 12x330- ரூபா 36,410 | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல்). |

03. **பொது நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது வடமேல் மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளில் சேவை புரிகின்றவர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லையினை கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது) ;

(iii) உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் 3 வருடங்களுக்குக் குறையாத காலத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (பதிவினை கிராம அலுவலரினால் வெளியிடப்படும் சான்றிதழ் மூலம் உரிய பிரதேச செயலாளரினால் மேல் ஒப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.) ;

(iv) நல்லொழுக்கமும் ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(v) தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகாதிருத்தல் வேண்டும் ;

(vi) விண்ணபப்படிவம் கோரிய பின் அல்லது கோரும் சந்தர்ப்பத்தினுள் அல்லது இந்த ஆட்சேர்ப்பு காலதாமதம் ஏற்படல் அல்லது இந்த அறிவித்தல் இரத்துச் செய்வதற்கு அல்லது திருத்தும் அதிகாரம் உடுபத்தாவ பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்தாகும்.

04. **ஆட்சேர்ப்பு முறை**

நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுபடி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தற்போது சபையில் கடமை யாற்றுகின்ற அமய/பதிலாக/ஒப்பந்த/தற்காலிக/உடன்படிக்கை அடிப்படையில் சேவையாற்றுகின்ற பணியாளர்களும், நிரந்தர சேவையில் உள்ளவர்களும் பதவி வகிக்கின்றவர்களுக்கும், மேலதிக கவனம் செலுத்தப்படும்.

05. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது. 03 ஆண்டு நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டதாகும் ;

(ii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக வடமேல் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்டுள்ள பணி திட்டத்தின் நிபந்தனைகளுக்கும், நிதிக் கோவைக்கும், அரசாங்க திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண சபை அல்லது வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள இணங்க வேண்டும்.

06. **விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டிய முறை :**

(i) விண்ணப்பப்படிவங்கள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவப்படி ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2019.06.29 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் "செயலாளர், உடுபத்தாவ பிரதேச சபை, உடுபத்தாவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் இடப்படுகின்ற கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயரினை குறிப் பிடப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் காணப்படும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) பாடசாலையில் இருந்து விலகும் போது பெற்றுக் கொள்ளப்படும் சான்றிதழ் ;
(4) நிரந்தர குடியிருப்பினை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலர் சான்றிதழ் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும் ;
(5) தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ் ;
(6) பொலிஸ் சான்றிதழ் ;
(7) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு.

கே. கே. யூ. ஜே. என். பெரேரா,
செயலாளர்,
உடுபத்தாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
உடுபத்தாவ,
2019, யூன் 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

உடுபத்தாவ பிரதேச சபையில் ...................................................... பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் : ..............................................................

முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : ..............................................................

2. நிரந்தர முகவரி : ..............................................................

3. பிறந்த திகதி : ஆண்டு : ............... மாதம் : ............... திகதி : ...............

2019.06.29 ஆம் திகதிக்கு வயது : வருடங்கள் ............... மாதங்கள் : ............... நாட்கள் : ...............

4. பிரதேசச் செயலாளர் பிரிவு : ..............................................................

5. இலங்கைப் பிரசையாவது பிறப்பினாலா / அல்லது பதிவு மூலமாகவா என்பது பற்றி : ..............................................................

6. பால் : (ஆண்/பெண்) பற்றி : ..............................................................

7. விவாகமானவர்/விவாகமாகாதவர் பற்றி : ..............................................................

8. கல்வித் தகைமைகள் :

க.பொ.த. (சா.த.) பரீட்சை (முதலாம்/இரண்டாம்)

சுட்டெண் : ................................ ஆண்டு : ........................ திகதி : ................................

| | பாடங்கள் | சித்தி | | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

க. பொ. த ( உ. த ) பரீட்சை தொடர்பான விபரம்

சுட்டெண் : ................................ ஆண்டு : ........................ திகதி : ................................

| | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

09. தொழில் மற்றும் ஏனைய தகைமைகள் : ..........................................................................................

10. உங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? ...........................................................

11. அவ்வாறாயின் தண்டனையின் தன்மை : ..........................................................................................

12. தற்போது பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அது பற்றிய விபரம் : ....................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................. ......................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் நிறுவனத் தலைவரின் சிபாரிசு**

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி. .....................................................தற்போது இந்த அலுவலகத்தில் ...................................................................... ஆக சேவையில் உள்ளார். அவரின்/அவளின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எல்லாம் உண்மையானவையும், அவர்/அவள் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப் பட்டால் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும், அவர்/அவள் எவ்விதத்திலாவது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாகவில்லை என்றும் உறுதிப்படுத்துவதுடன், விண்ணப்பப் படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்/சிபாரிசு செய்யவில்லை.

........................... .....................................................

திகதி திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

06 - 690

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மாவத்தகம பிரதேச சபை

*பாதை பற்றிய அறிவித்தல்.*

*இலக்கம் 2, 075 மற்றும் 2019.01.18 ஆந் திகதி உடைய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள 648, இலுகேவெல பிரிவுக்குள் அமைந்துள்ள தெல்பத்தன - தெனியவத்தை என்ற பாதைக்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் சட்டத்தின் 24 (2) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் எந்தவிதமான எதிர்ப்புக்களும் கிடைக்கப் பெற வில்லை. அதனால் அந்தப் பாதையினை மாவத்தகம பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையாக ஏற்றுக் கொண்டு செயற்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*எஸ். கே. அநுர கமல் பெரேரா,*
*தலைவர்,*
*பிரதேச சபை மாவத்தகம.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மாவத்தகம,*
*2019, மே 17.*

*06 - 247*

---

## நவகத்தேகம பிரதேச சபை

## தகன வளாகம் மற்றும் மயானக் கட்டளைச் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்

*1987ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 127ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய தகன வளாகம் மற்றும் மயானக் கட்டளைச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்விளைவான) சட்டப்படி உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து இறந்தவர்களை அடக்கம் செய்தல் மற்றும் தகனம் செய்யும் பணியினை செய்கின்ற சொத்தாக பிரகடனப்படுத்துகின்றேன்.*

*எஸ். எம். ஐ. எஸ். சேனாதிபதி,*
*தலைவர்,*
*நவகத்தேகம பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*நவகத்தேகம,*
*2019, மே 08.*

| தொ. இல. | சொத்துக்களின் விபரம் | கி.சே.பிரிவு | துண்டு இலக்கம் | அளவு ஹெக். | வரைபு பத்திர இல. | எல்லைகள் பற்றிய விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வடக்கிற்கு | கிழக்கிற்கு | தெற்கிற்கு | மேற்கிற்கு |
| 1 | வெலேவெவ தகன வளாகம் | 646/1 வெலேவெவ - வடக்கு | 975 | 0.531 | FVP 3216 | துண்டு இலக்கம் 977,976 மற்றும் 979 | துண்டு இலக்கம் 976 மற்றும் 979 | துண்டு இலக்கம் 976 மற்றும் 979 மற்றும் 977 | துண்டு இலக்கம் 976 மற்றும் 977 |
| 2 | மஹமெத்தேவ தகன வளாகம் | 643/1 மஹமெத்தேவ | 7768 | 1.7196 | TOPO,PP 22 | துண்டு இலக்கம் 7769 மற்றும் பி.ச. பாதை | பி.ச. பாதை மற்றும் துண்டு இலக்கம். 7769 | துண்.இல. 7769 | துண்.இல. 7769 |
| 3 | மொரகஹ செச தகன வளாகம் | 643 மொரகஹவெவ | 135 | 0.806 | FVP 3457 | து.இல.61 மற்றும் 136 | துண்டு இலக்.136 மற்றும் 134 | துண்.இல.134 FVP 3456 | FVP 3456 மற்றும் து.இல. 61 |
| 4 | கெதர வெவ (ரச்சிராகம) தகன வளாகம் | 645/4 கெதரவெவ | 2 | 0.822 | BSVP 3451 | து.இல. 03 | துண்டு இலக்கம் 97 | துண்.இல. 97 | துண்டு இலக்கம் 1 |
| 5 | போகஹ வெவ தகன வளாகம் | 644/3 மீயெல்லேவ | 103 | 0.7022 | FVP 3399 | து.இல. 94 | மீயெல்லேவ கிராம எல்லை மற்றும் துண்டு இலக்கம் 104 | து.இல. 106 மற்றும் 105 | து.இல. 96 மற்றும் 12 |
| | | | 105 | 0.0533 | FVP 3399 | து.இல. 103 மற்றும் 104 | துண்டு இல. 106 | து.இலக்கம் 106 | து.இல. 106 மற்றும் 96 |
| 6 | தம்மென்னாவெடிய தகன வளாகம் | 646 தம்மென்னாவெடிய | 1146 | 0.5974 | FVP 3216 | து.இல. 1147 | து.இலக்கம். 1148 | து.இல. 1148 | து.இல. 1148 |
| 7 | குருலு வெவ தகன வளாகம் | 647/3 குருலுவெவ | 173 | 0.514 | FVP 3215 | து.இல. 174 | து.இலக்கம். 174 | து.இல. 174 | FCP பி 26 இல் து.இல. 338 மற்றும் து.இல.172 |
| 8 | இங்கிணிமிடிய கிழக்கு தகன வளாகம் | 645/1 இங்கிணிமிடிய கிழக்கு | 245 | 0.181 | FVP 3221 | து.இல. 244 | து.இலக்கம். 246 | து.இல. 250 | ஹமங்கல்ல FVP 3219 |
| 9 | கோன்கடவல தகன வளாகம் | 645 கோன்கடவல | 485 | 0.3108 | FCP PU 23 | FVP 3218 இல் து.இலக்கம் 409 | பி.ச. பாதை | து.இல. 486 | FVP 3218 இல் து.இல. 411 மற்றும் 409 |
| | | | 486 | 0.4144 | FCP PU 23 | து.இல. 485 | பி.ச. பாதை | பிரதேச சபை பாதை | பி.ச. பாதை |
| | | | 409 | 0.5076 | FVP 3218 | து.இல. 411 | பி.ச. பாதை மற்றும் FCPPU 23 இல் துண். இல 485 | FCP PU 23 இல் து.இலக்கம் 485,486 மற்றும் இந்த வரைபு து.இலக்கம். 411 | பி.ச. பாதை |

| தொ. இல. | சொத்துக்களின் விபரம் | கி.சே.பிரிவு | துண்டு இலக்கம் | அளவு ஹெக். | வரைபு பத்திர இல. | எல்லைகள் பற்றிய விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வடக்கிற்கு | கிழக்கிற்கு | தெற்கிற்கு | மேற்கிற்கு |
| 10 | ரம்பகனயாகம தகன வளாகம் | 644/1 ரம்பகனயாகம பிரிவு | 121 | அக் :2<br>பர் :8 | FVP 3432 | து.இல. 122 | து.இல. 122 | து.இல. 122 | து.இல. 123 |
| 11 | கணன்கெட்டே தகன வளாகம் | 644/1 ரம்பகனயாகம | 82 | 0.1695 | FVP 3449 | 3449 இல் து. இல. 81 | 3449 இல் து. இல. 86 | 3449 இல் து. இல. 86 | பி. ச. பாதை |
| 12 | வெம்புவெவ தகன வளாகம் | 644 கிரிமெடியாவ | 17 | ஏக். 2<br>பர். 15 | FVP 3445 | ஆணமடுவ நவகத்தேகம பிரதான பாதை மற்றும் பாதுகாப்பு பிரதேசம் | 3445 இல் து.இல. 16 | 3445 இல் து.இல. 16 | 3445 இல் து.இல. 16 மற்றும் பாதை பாதுகாப்பு பிரதேசம் |
| 13 | மஹபிடிய தகன வளாகம் | 643 மொகஹவெவ | 132 | 0.808 | FVP 3455 | து. இல. 96, 97 மற்றும் 134 | து. இல. 134 மற்றும் 133 | து. இல. 133 மற்றும் 131 | து. இல. 131, 95 2/2 மற்றும் 95 1/2 |
| 14 | இங்கினிமிடிய மேற்கு (ஹமங்கல்ல) தகன வளாகம் (திவுல் வெம்பு மூக்கலான) | 645/1 இங்கினிமிடிய கிழக்கு | 123 | 0.371 | FVP 3219 | து.இல. 122 | இங்கினிமிடிய FVP 3221 | து.இல. 124 | து.இல. 122 |
| 15 | இங்கினிமிடிய மேற்கு தகன வளாகம் | 645/2 இங்கினிமிடிய மேற்கு | 201 | 1.612 | FVP 3218 | பாதை | பாதை | து.இல. 202 | து.இல. 202 |

06 - 309

## மாவத்தகம பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) மற்றும் 24 (2) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் செய்யப்படுகின்ற அறிவித்தல்.*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் , மாவத்தகம பிரதேச சபையினால் இங்கு இணைக்கப்பட்டுள்ள பாதையினை மாவத்தகம பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையாக வெளியிடப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாதை சம்பந்தமாக குறிப்பிட்ட காணிகளின் சொந்தக்காரர்களாக உரிமைகோரும் தரப்பினரிடமிருந்து ஏதும் எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இந்த அறிவித்தல் திகதியிலிருந்து ஒரு மாத கால எல்லைக்குள் தங்களது உரிமையினை நிரூபிப்பதற்காக 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் செயற்படும் படி இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்தக் கால எல்லைக்குள் ஏதும் எதிர்ப்புக்கள் முன் வைக்கப்படாத விடத்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையினை பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையாக ஏற்றுக் கொண்டு பரிபாலிக்கப்படும் என்பதை பொது மக்கள் அறிந்து கொள் வதற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

இந்தப் பாதையின் கட்டிட எல்லை பாதையின் மத்தியிலிருந்து 25 அடிகள் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைவர்,
எஸ். கே. அநுர கமல் பெரேரா,
மாவத்தகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாவத்தகம,
2019, ஏப்பிறல் 03.

### அட்டவணை

| இல. | பிரிவு | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவடையும் இடம் | இடது பக்க உரிமையாளர்கள் | வலது பக்க உரிமையாளர்கள் | நீளம் | அகலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 675- கொடிகாபொல | ஐந்தாம் ஒழுங்கை | ரஷ்மி ஹோட்டல் | திரு. வீரசிங்ஹவின் காணி | 1.திரு. ஜே.ஏ. ஜயரத்ன<br>2.திரு. பிரசாத்<br>3.திரு. சந்திரா<br>4.திரு. என்.எச்.ஜீ. ரனசிங்ஹ | 1.திரு. சமன்<br>2.திரு. மங்கலகே<br>3.திருமதி சந்திமா<br>4.திரு. கே. எச். சந்திரதாஸ<br>5.திருமதி கமலா<br>6.திரு. ஜயரத்ன<br>7.திரு. விஜேநாயக்க | 250 மீட்டர் | 15 அடி |
| 02 | 648- தெல்பத்தன | கனகவத்தகே சந்தியிலிருந்து பமுனுகம கந்தை வரையிலான பாதை | திருமதி சந்திராவதியின் காணி | திரு. ஜீ. ஜீ. பிரேமசிரியின் காணி | 1.திரு. திலக்கரத்ன<br>2.திருமதி நாலினி சிரியலதா<br>3.திரு. மஞ்சுல ரத்னசிரி<br>4.திருமதி சந்திராவதி<br>5.திரு. நந்தன ஜயசூரிய | 1.திரு. அபேபால<br>2.திரு. பிரேமசந்திர<br>3.திரு. அமில பிரசாத்<br>4.திரு. பிரேமசிரி<br>5.திரு. சோமரத்ன | 250 மீட்டர் | 12 அடி |
| 03 | 705- வெவகெதர | வெவகெதர - இஹலவத்தை பாதை | வெவகெதர பாடசாலை | திருமதி ரேனுகா கல்அங்கவின் காணி | 1.திருமதி ரேனுகா கல் அங்க<br>2.திரு. ஜீ. ஜீ. எல். எஸ். கல்அங்க<br>3.திரு. எம். துசுல<br>4.திரு. ஆர்.பி.ரி. சுரங்க<br>5.திருமதி ஆர்.பீ. சுமனாவதி<br>6.திரு. சுனில் குனதுங்க<br>7.திரு. வீரசிங்ஹ ராஜபக்ச | 1.திரு. சீ. ஹேவாரத்ன<br>2.திருமதி கே.ரி. எமலின்<br>3.திரு. சுமித் ராஜபக்ஷ<br>4.திரு. தாரக்க கெலும் | 390 மீட்டர் | 15 அடி |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இல. | பிரிவு | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவடையும் இடம் | இடது பக்க உரிமையாளர்கள் | வலது பக்க உரிமையாளர் | நீளம் | அகலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 04 | 661- உட இங்குருவத்தை | மீதெனியே கால்வாயிலிருந்து வரகாகந்தை பாதை | உட இங்குரு வத்தை | தெபெல் வத்தை | 1.திரு. எச்.எம். பொடி நிலமே<br>2.திரு. எச்.எம்.எஸ். புஸ்ஸெல்ல<br>3.திரு. விமலசேன<br>4.திருமதி சோமலதா<br>5.திரு. சந்திரரத்ன | 1.திரு. ஆனந்த<br>2.திரு. சுமித்<br>3.திரு. எச்.எம். ஹீன் பண்டா<br>4.திரு. எச்.எம். செனவிரத்ன<br>5.திரு. எம். ஜீ. விமலசேன<br>6.திரு. சுனில்<br>7.திரு. ஜீ. பீ. குணரத்ன | 410 மீட்டர் | 12 அடி |

*06 - 248*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.